ARUNDATHI

புண்ணிய புராணப் படம்

பதிப்புரிமை] 1943 [கம்பெனியாருடையது

பிரதம நடிகர்கள்

செருகளத்தூர் சாமா	வசிஷ்டர்
ஹொன்னப்ப பாகவதர்	அக்னி
எஸ். டி. சுப்பையா	நாரதர்
கே. கே. பெருமாள்	வீரசாம்பான்
என். எஸ். கிருஷ்ணன்	கண்ணன்
காளி என். ரத்னம்	வள்ளுவன்
டி. பி. பொன்னுசாமி பிள்ளை	மிராஸ்தார்
கே. பி. காமாக்ஷி	மாப்பிள்ளை
யு. ஆர். ஜீவரத்னம்	அருந்ததி
எம். ஆர். சந்தானலக்ஷ்மி	ஸ்வாஹா
டி. எ. மதுரம்	கண்ணம்மா
பி. எஸ். சிவபாக்யம்	வாசுகி
எம். எம். ராதாபாய்	சண்டிகை
ஜே. சுசீலா தேவி	அனுசூயா
ஞானம்பாள்	பார்வதி
கே. கே. கிருஷ்ணவேணி	மாலிகா

டைரக்ஷன்: **M. L. டாண்டன்**

வசனம்: **D. V. சாரி**

பாடல்கள்:

பாபநாசம் சிவன்

S. வேல்சாமி கவி

உ

அருந்ததி

கதைச் சுருக்கம்

"**அம்மி மிதித்து அருந்ததி பார்**" என்பதைக் கேட்டிராத தம்பதிகள் இந்நாட்டில் இல்லை. அதே அருந்ததி பூர்வ ஜென்மத்தில் **சண்டிகை** என்ற பெயருடன் வசிஷ்டரின் பத்னியாக இருந்து வரும் நாளில், ஒருநாள் வழக்கம்போல் அக்ஷதை செய்வதை மறந்து சமயல் வேலையில் முனைந்திருக்கிறாள். **வசிஷ்டர்** அக்ஷதை கேட்டதும் துடித்து அவசரமாக அங்கு தங்கியிருந்த அசுத்த ஜலத்தில் அக்ஷதை தயாரிக்கிறாள். இதையறிந்த வசிஷ்டர் சண்டிகையை வெறுத்து வெளிக்கிளம்ப, நாதனைப் பிரிந்த வருத்தத்தில் சண்டிகை தற்கொலைசெய்துகொள்ள முயற்சிக்கும்போது ஈஸ்வரன் தோன்றி, சண்டிகையை சக்கிலிய குலத்தில் பிறந்து வந்து வசிஷ்டரை மறுமுறையும் நாதனாக அடையும்படி திருவருள் செய்கிறார்.

சிவபக்தனான சக்கிலி **வீரசாம்பானின்** மகளாக சண்டிகை பிறந்து **அருந்ததி** என்ற பெயருடன், கன்னிப் பருவமடைகிறாள். அருந்ததியை அவளின் தாயார் **வாசுகி** தனது தம்பிக்கு திருமணம் செய்துவைக்க முடிவு கொண்டு, பலவழியிலும் முயற்சிக்க; விருப்பமில்லாத அருந்ததி அவளின் எண்ணத்திற்கு இணங்கவில்லை. அதனால் அருந்ததி அடைந்த கஷ்டங்கள் பல. என்றாலும், அவ்வப்போது, ஈஸ்வரன் கிருபையால் காப்பாற்றப்பட்டு வருகிறாள்.

ஒரு நாள் வாசுகி தன் தம்பிக்கு அருந்ததியை மணம் முடிக்க, வள்ளுவனைக் குறி கேட்கிறாள். காளி பூசை நடத்திவிட்டு கல்யாணத்தை முடிக்கும்படி வள்ளுவன் கூற, அதன்படி பூஜை ஏற்பாடாகிறது. பூஜையின்போது வள்ளுவன் ஆவேசத்தில் வாக்கு சொல்லுகிறான். அது சமயம் ஒரு ஜோதி வள்ளுவன் மனதில் புகுந்து, அருந்ததியை மூன்று நாள் வீட்டை விட்டு விலக்கிவைத்து பிறகு திருமணம் செய்யும்படி வாக்கு பிறக்கிறது. அதன்படி தனிக் குடிசையில் அருந்ததி வைக்கப்படுகிறாள். அந்த மூன்று நாளைக்குள் ஒரு நாள், ஈஸ்வரஜோதி வழிகாட்ட அருந்ததி, ஒரு கானகத்திலுள்ள குடிசைக்கு அழைத்துச் செல்லப்படுகிறாள். கல்யாண ஆரம்பச் சடங்குகளை எல்லாம் முடித்துவிட்டு, அருந்ததியைக் கூட்டிப்போக, வாசுகி வந்து, குடிசையில் தேடிப்பார்க்கிறாள்.

அருந்ததி காணாமற்போனது கண்டு துடித்து ஓடி, மணச்சடங்குகளை நிறுத்துகிறாள்.

வசிஷ்டரை இல்லறவாசியாக்க **நாரதர்** நினைத்தாரென்றால் அனைவரும் அவர் சூழ்ச்சியில் ஆடித்தானே தீர வேண்டும். கானகக் குடிசையில் தங்கியிருக்கும் அருந்ததிக்கு, சிவன் கனவிற் தோன்றி காலையில் வரும் அதிதியை கணவனாக ஏற்றுக்கொள்ளும்படிச் சொல்லி மறைகிறார். மறுநாள் காலை, ஈஸ்வரன் வசிஷ்டர் உருவத்தில் வந்து அருந்ததியை உணவு கேட்க, அவள் பரிமாறுகிறாள். "கன்னிப் பெண் கையில் பிச்சை ஏற்பதில்லை" என்று ஈஸ்வர வசிஷ்டர் எழுந்துபோக, அருந்ததி பின் தொடர்ந்து செல்லுகிறாள். —ஈஸ்வர வசிஷ்டர் உண்மை வசிஷ்டரின் ஆஸ்ரமத்துள் புகுந்து மறைகிறார்.

வசிஷ்டர் சமையல் செய்து கொண்டிருக்க, உள் நுழைந்து பார்த்த அருந்ததி, பிச்சை கேட்க வந்தவர் இவரேதானென்று நினைத்து வசிஷ்டரை **ஈஸ்வரன்** உத்திரவுப்படி தன்னை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறாள். வசிஷ்டர் பல சோதனைகள் புரிந்து இறுதியில் மணந்து கொள்கிறார்.

வாஜபேய யாகம் நடைபெறுகிறது. அங்கு விஜயம் செய்திருந்த **அக்னி** சப்தரிஷி பத்னிகளையும் கண்டு காமுறுகிறான். காமவேட்கையால் தவிக்கும் அக்னி — தனது பத்னி **ஸ்வாஹா**விடம் தனது எண்ணத்தைக் கூற ஸ்வாஹா ஒவ்வொரு ரிஷி பத்தினிபோல் வடிவெடுத்துச் சென்று அக்னியை திருப்தி படுத்துகிறாள். ஆனால் அருந்ததிபோல் உருவெடுக்க முடியவில்லை. அதை யறிந்த அக்னி எப்படியும் அருந்ததியை அடைய எண்ணி பூலோகம் வந்து அருந்ததியை சந்தித்து பலாத்காரம் செய்கிறான். இதை நேரில் கண்ட வசிஷ்டர் அருந்ததியிடம் தப்பிதமாக கோபங்கொள்கிறார்.

அக்னியின் அக்ரம முயற்சியில் வெறுப்படைந்து அருந்ததி அக்னி விரும்பி வர்ணித்த கண்களைப் பிடுங்கி அவன் மீது வீசிவிட்டு அவனை சபிக்கிறாள்.—

திரிலோகங்களிலும் அக்னி மறைகிறது. அருந்ததியும் வசிஷ்டரால் வெறுக்கப்படுகிறாள். போக்கிடமின்றித் தவிக்கும் அருந்ததி கடைசியில் தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்க ஈஸ்வரன் தோன்றி "**அருந்ததி மஹா புனிதவதி**" என்பதை நிரூபித்து சப்தரிஷி மண்டலத்தில் ஒரு நக்ஷத்திரமாக விளங்கும்படி திருவருள் செய்கிறார்.

சுபம்

ஓம்

அருந்ததி

பாட்டுக்கள்

வசிஷ்டர்] ரா. ஜயமனோகரி,—தாளம்-ஆதி [செருகளத்தூர்சாமா

பல்லவி

ஸந்ததமும் உனைப் பணிவேன்
ஸர்வேஸ்வரன் நீயென மனதால் (ஸந்.)

அநுபல்லவி

இந்திரன் முதலாம் வானோர்க்கமுதம்
இரங்கி அருளும் தூயவனே — நான் (ஸந்.)

சரணம்

நான்கு வேதமும் புகழ்வதும் உனையே
நரஸுரர் களுக் குயிர் தரும் தேவே
வான்குலவும் மதி ஆதவனும் — ஒளி
வளர்வதுனது தயவல்லவோ — நான் (ஸந்)

அருந்ததி] ராகம் - ஹிந்துஸ்தான் [U. R. ஜீவரத்னம்

உன் முடிமேல் சேற்றில் வந்த
தாமரையும் சூடினை
உனதன்பினால் நிறைந்தால்
உயர்வேது தாழ்வேது
ஐயனே இன்பமாய் (உன்)
தீன பந்து நீ என
நான் மறை
புகழும் ஈசா எனை யாள்
ஏழைக்கு மேழை நான்
கங்காஜடாதரா சம்போ (உன்)

வாசுகி] [P. S. சிவபாக்யம்

கோபுரத்துமேலே கொத்தமல்லி போலே
கொத்தமல்லி போலிருந்த குட்டி செய்த வேலை
பட்டியிலே கட்டிவச்சேனே ஹோ ஹோ
படுத்திருக்க காணேனே

இழுத்துக் கட்ட முடிய வில்லை
எப்ப பாரு இந்தத் தொல்லை (கோ)

ஜோடியிருக்க சுளை முழுங்கலாச்சு — அந்த
ஜோடி ஆடு எலும்புந் தோலாப் போச்சு
போனதினால் லாப முண்டாச்சு

போட்ட குட்டியாலே
பட்டி ரொம்பிப் போச்சு (கோ)

அருந்ததி] தெம்மாங்கு [U. R. ஜீவரத்னம்

வயிறு பசித்து தின்னா லன்றோ
கறியின் ருசி தெரியும்
எவ்விதம் புளிச்ச ஏப்பக்காரன்
பசியின் கொடுமை அறிவான்
வெயிலில் வருந்தி வாடும வனே
நிழலின் அருமை அறிவான்
வேர்வை துளிக்க உழுகும் எருதின்
வலி அறியுமோ காக்கை

நாரதர்] ராகம் - தர்பார் — தாளம் - ஆதி [S. D. சுப்பையா

மாய்கையினால் நீ உனையே மறந்தே
வாழ் வில் மூழ் கலாமோ

ஜெக மிதுவே ஒரு சொர்ப்பனமே — மனமே (மா)
யாரே அறிவார் நாதனின் லீலை

ஆவதும் அழிவதும் அவன் செயலாலே
அறிந்த போது தவமே பெறலாம்

தேவருக் கரிய மேன்மையுற்றினிய
ஜீவன் முக்த ரென வாழ்ந்திடலாம்

மாமதி சூடிய மலரவன் தேடிய
தாமரைச் சேவடி சேர்ந்திடலாம்

சந்ததமு மில்லை வருத்தம்
என்றும் உனக்கிது பொருத்தம்
ஏனோ வீணாய் நீயே
இறைவன் அடியை பணிய
மறந்து இருவினை தரும் (மா)

நிர்தர்] ராகம்-வாஸஸ்பதி — தாளம்-ஆதி [S. D. சுப்பையர்

பல்லவி

கைலாஸ பதே கருணை புரிவாய்
முக்கண்ணுடையாய் விரிசெஞ் சடையாய் (கை)

அநுபல்லவி

சைலேந்தர குமாரி மனோஹரனே— சிவ
சங்கரனே சந்த்ர சேகரனே (கை)

சரணம்

சம்போ த்ரி புராந்தகனே
லம்போதரன் ஜனகனே
சுயம்புவாம் அனகனே
சகலலோக நாயகனே (கை)

அருந்ததி] ராகம்-சிந்து பைரவி—தாளம்-ஆதி [U. R. ஜீவரத்னம்

ஈன குலந்தனில் ஏன் பிறந்தேன்
ஈசா, ஈசா,—மாசுறும் (ஈன)
என் பிழை எதுள்ளம் நொந்து வந்தேன்
ஈசா ; ஈசா
மாநிலந் தன்னில் யார் துணை
நீ எனை ஆளாய் ஆளாய்
மங்கையுமை மணவாளனே
இனி தாளேன் தயாளா (ஈன)

அருந்ததி] இந்துஸ்தான் [U. R. ஜீவரத்னம்

இறைவனைக் கண்டேன் அமுதுண்டேன்
இன்பங் கொண்டேனே.
ஜோதி மய மாய் சுந்தர வடிவாய்
பாதி மதியும் அபய காமுமாய்
நீதி உருவாய் நெற்றியில் விழியாய் (இறை)
பிறவி ஆசை தீர்ந்து போனதே
பாக்யசாலியும் நானே
லோக மீது விதி இன்று மறைந்ததே
மோட்ச மதே பெறுவேனே
வாழ்விலே இனி துன்பமு மேது
மலரடியே பணிந்தேன் (இறை)

வசிஷ்டர்] ரா. - காப்பி—தா. - ரூபகம் [செருகளத்தூர் சாமா

பல்லவி

ஜக மாயை பெரிதே
மலரயனும் வெல்லரிதே (ஜக)

அநுபல்லவி

சுகமுனி மனம் மாறினால்—மற்ற
சாமுனி வரைப் பேசவோ. (ஜக)

சரணம்

மாயனும் நானும் சுழலும்
காலசக்ரம் எவரை விடும்

தீய ஐம்புலன்கள் ஜெயித்தல்
யாவர்க்கும் அரிதாகுமே (ஜக)

வசிஷ்டர்] ராகம்-சாவேரி—தாளம்-ஆதி [செருகளத்தூர் சாமா

யாரே இவ்வுலகினில் எனையறிவார்
நானோர் அனாதியென (யா)

விளையாடுவள் மூத்தாள் மாகாளி
வெளியில் சொல்ல வெட்கக் கேடு நீலி
இளையாளோ தலையிலேறு வள் கேலி
ரெண்டு பெண்டாட்டிக்காரனோர் கோமாளி (யா)

இரண்டு பிள்ளை யிருந்து மென்ன முந்தி
இடம் விட்டு நகராதவன் பெரும் தொந்தி
முரண்டு மற்றொன்று தகப்பன் சாமி
முத்துச்சாமி அறுதலை குறக்காமி (யா)

பாம்பைக் கண்டு நகைப்பர் இதை விடக் கொ்டிய
பாம்பைக் கண்டு பல்லிளிப்பர் நான் அணியும்
சாம்பல் பூசக் கூசுவார் முடிவில் பிடி
சாம்பலுடல் சுமை தாங்கிகள் — மெய்யடி (யா)

ஸ்வாஹா] [M. R. சந்தானலக்ஷ்மி

என் மோஹன சுகு மாரன் எனை ஏன்
மறந்தாரோ

எவளின் மோஹ வலையில் வீழ்ந்து
இணங்கலுற்றாரோ—மன (மோ)

அலங்கார மெல்லாமே
அலங்கார மெல்லாம் வீணாகுதே—கால் ஓயுதே

கமலக் கண்கள் தேடித் தேடி
சோர்வாகுதே
வசந்த ரூப மதன காந்தன்
மனமிறங்காதா (என்)

ஸ்வாஹா] ராகம்-கீர்வாணி. தா - ஆதி [M. R. சந்தானலக்ஷ்மி

அம்பா நீ வரம் தரவேண்டுமே—(அம்பா)
வம்பில் என் மணாளன் பேராசை யாலே
மதியிழந்து வீணில் அழியாமல் இன்று (அம்பா)

அக்நி, ரிஷிபத்னிகள்] ஹிந்துஸ்தான் [ஹொன்னப்ப பாகவதர்

(1)

அக் :— ஈதல்லவோ தெள்ளமுதம் தேவரில் யாரறிவார்
பத் :— மாதரில் உயர்மிகு மாதவம் என்போல்
செய்தவர் எவருமில்லை
அக் :— நாம் கலந்தோம் மலர் மணம் போலே
பத் :— யார் மலர் யார் மணம் ஆருயிரே (ஈத)

(2)

அக் :— ரதி நிகர் மின்னே இதன் பெயரென்ன
மூவரும் காணறிய
பத் :— ஆனந்தம் ஆனந்தம் தானிதே
அக் :— என்னுயிர் நீயே
பத் :— இன்று நன்னாளே

(3)

அக் :— மன மோஹினிப் பெண் மானே
பத் :— ஹ ஹ ஹ ஹ ஹ ஹ
அக் :— நானா முனங்கேனே இனி நாமிருவர் வேறோ
பத் :— நெஞ்சக் காதல் வஞ்சகமேது (மன)

(4)

அக் :— எது விரும்பினும் தந்தேன் மனோஹாரி ணீ
பத் :— என்றும் மறவா அன்பது வேண்டும்
அக் :— இன்பம் வேறெனக் குண்டோ
பத் :— வண்டு சுழன்று தேன் உண்ட பின்
நீண்டு மோ.

(5)

அக் :— அன்னமே இன்னமுதே மின்னிடை மடமானே
பத் :— மன்னனே மன்மதனே இன்பம் இன்றடைந்தேன்
அக் :— இனிவேறோர் மாதை விரும்பேன்
பத் :— கனவே உண்மை யீதாமோ

(6)

அக் :— மானினீ என்னருகில் வாராயோ
பத் :— ஆனந்தம் தந்திடும் சிருங்காரா
உயர் ஸுந்தர ஒய்யாரா.
அக் :— ஈருடல் ஓருயிராய் என்றுமே இன்புறுவோம்
இருவரும் :— இன்பம் இதுபோல் வாழ்வினி லுண்டோ
ஆனந்தம் ஆனந்தமே.

அருந்ததி] ராகம்-ஹேமவதி—தாளம்-ஆதி [U. R. ஜீவரத்னம்

ஓ ஜகதீசா உன் திருவுள்ளம்
ஈதோ பேதை முன் வினை தானோ
மாதரில் என் போல் பாதகி யேது
நீ கருணாநிதி என்பது வீணோ
கண்ணிழந்தேன் உயிரினும் சிறந்த என்
கணவன் அன்பும் இழந்தேன்—வாழ்வேது
உண்மையில் நான் கற்பிழந்தது உண்டோ (ஓ ஜக)

நாரதர் [ராகம்-பிலஹரி—ஆதி-தாளம் [S. D. சுப்பையா

பல்லவி

அருந்ததி மஹா புனிதவதி
அருங்குணவதி ஸுமதி—சதி (அரு)

அநுபல்லவி

பெருந் தணலை, ஒரு புழு வந்தணையுமோ
பேய் பிடித்த தீயும் தீண்ட அழிவனே (அரு)

சரணம்

ஒப்பில் அவள் பெயர் சொல்ல
எவர்க்கும் மகிழ்வே
உண்மை அன்புடன் கற்பு முடையவள்
முப்புவனத்திலும் இணையில் ஜீவன்
முக்தையிவள் பரி சுத்தை இவள்.—சதி (அரு)

N. S. கிருஷ்ணம், மதுரம் பாட்டுகள்

கண்ணன் }
கண்ணம்மா }

{ என். எஸ். கிருஷ்ணன்
{ டி. எ. மதுரம்

இரு : மூளையே இல்லாட்டா முன் [illegible] றம் வா [illegible] டுமோ
காளையில்லா வண்டி - கதிபோலே ஆ [illegible] (மு)

மது : காளையிதோ — ஹா
பசவும் நானே தான்

இரு : கடவுள் அருளிருந்தால்
இருக்கு — அப்போ சரி

மது : மாப்பிள்ளை நீயே தான்
மணப் பெண்ணும் நானே தான்

இரு : ஹா . . ஹா . . ஹா

மது : ஆத்திர மேனோ — ஆரப்பொறுக்க வேணும் (மூளை)

இரு : கட்டிப்பிடித்திடவே

மது : ஹூம் ஹூ ஹூம் ஹூம்

இரு : காலமென்னும் சக்கரத்தால்
ஓடும் வாழ்க்கை வண்டிதனை
மாடுபோலவே இழுக்கும்
மனிதர் போலவே இழுப்போம் (மூளை)

கண்ணம்மா] [டி. எ. மதுரம்

கட்டுக் கடங்காத — ஆசை
சட்டழகா உனக்கே
பொட்டிட்டு பார்த்திட்டாலே — கண்ணம்மா
சொட்டுமே உன்னழகு

சட்டை தலைப்பாகை — வயிர
சங்கிலியும் உனக்கே
பட்டும் உடுத்திவிட்டால் — கண்ணம்மா
பார்க்கக் கண் கோடி வேணும்

தொட்டு இழுத்திடவே — மனது
தூண்டுது இந்நேரம்
கட்டிப் பிடித்தாலும் — கண்ணம்மா
காதல் தனியாதே

• ... து தனிப் பெருமை •

• ...ழுக்கத்திற்கு சாட்டை •

• படிப்பினை முறையில் ஒரு நவீனம் •

* திவான் பகதூர் *

டைரக்ஷன் :—T. R. சுந்தரம் B.A., B.Sc. (Leeds)

*

தயாராகிறது

* P. U. சின்னப்பா
* K. L. V. வசந்தா
* N. S. கிருஷ்ணன்
* T. A. மதுரம்

நடிக்கும்

"வள்ளி கல்யாணம்"

டைரக்ஷன் :

T. R. சுந்தரம் B.A., B.Sc. (Leeds)

கூப்பர்ஸ் பிரின்டிங் வொர்க்ஸ், பெங்களூர்.